மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சினிமா இசையை நாம் சொல்லித் தர வேண்டியதில்லை. அவர்களே அதைப் பாடிப் பழகிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 385, திரு. ஆர். டி. அரங்கநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

385—

மங்கலம்பேட்டை பேரூராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதி.

*9497—திரு. ஆர். டி. அரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விருத்தாசலம் தொகுதி, மங்கலம்பேட்டை பேரூராட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதி செய்து கொடுக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) விருத்தாசலம் தொகுதி, மங்கலம்பேட்டை பேரூராட்சி, அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஏற்கனவே ஆறு படுக்கைகள் இருக்கின்றன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு ஆர். டி. அரங்கநாதன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மங்கலம்பேட்டை பேரூராட்சியின் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சுற்றி சுமார் 20 கிராமங்கள் உள்ளன. பொதுமக்கள் தினந்தோறும் நூற்றுக்கணக்கிலே ஆரம்ப சுகாதார நிலையத்திலே மருத்துவ சிகிச்சை பெற வருகை தருகிறார்கள். அப்படி வருகை தருகின்றவர்கள் புற நோயாளிகளாகவே மருத்துவச் சிகிச்சைபெற்று செல்லவேண்டிய சூழ்நிலை இருந்து வருகிறது. உள் நோயாளிகளாக மருத்துவ சிகிச்சைப் பெற வருகின்ற போது அங்கே போதிய படுக்கை வசதி இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இதனால் அந்த நோயாளிகள் எல்லாம் சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள உளுந்தூர்பேட்டைக்கு அருகில் உள்ள விருத்தாசலம் நகரத்தில் இருக்கின்ற அரசு

1993 ஏப்ரல் 19]

மருத்துவமனைக்குச் சென்று மருத்துவ சிகிச்சைப் பெற வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், இங்கேயே அந்த பேரூராட்சிக்கு உட்பட்டே மக்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருப்பதால் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் படுக்கை வசதிகளையும் இன்னும் அங்கே கூடுதல் மருத்துவர்களையும் ஏற்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அதிகபட்சம் 2 மருத்துவர்களும், அதிகபட்சமாக 6 படுக்கைகளும் வைக்க வேண்டுமென்ற நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது. குறைந்தபட்சம் இருக்கலாம். படுக்கை இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்கள் கூட இருக்கின்றன. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரையில் 6 படுக்கைகள் உள்ளன. அதிலே படுக்கை வசதிகளை அதிகமாக்குவதற்கோ, மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்குவதற்கோ நமக்கு வாய்ப்பு இல்லை. பக்கத்திலே எந்த இடத்திலே தாலுக்கா மருத்துவ மனை இருக்கிறது என்பதைப் பார்த்து அதிலே என்ன வசதிகள் இருக்கின்றன என்பதையெல்லாம் ஆய்வு செய்து, ஒரு தனியான நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

திரு. ஆர். டி. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மங்கலம்பேட்டையில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்திலே, அருகில் உள்ள கிராமங்களில் உள்ள மக்கள் எல்லாம் அதிகமாக அங்கே வந்து மருத்துவ சிகிச்சைப் பெறுவதற்கு ஆர்வத்தோடு வருகின்ற காரணத்தால் இந்த மருத்துவமனைக்கு மட்டும் கூடுதலாக படுக்கை வசதி ஏற்படுத்தித் தருவதற்கு கருணை உள்ளத்தோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் என்பதற்கு ஒரு வரைமுறை வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதிலே இந்த ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை மட்டும் நாம் மாற்ற முடியாது. சில அப்கிரேடட் பி.எச்.சி. இருக்கின்றன. அங்கே வேண்டுமானால் கூடுதலான எண்ணிக்கையில் படுக்கைகள் இருக்கின்றன. ஆனால் இதை பொறுத்தவரையில் அப்கிரேடு செய்ய முடியுமா என்று தெரியாது. எனவே தான் நான் சொன்னேன் அதைப்பற்றி தனியாக ஆய்வு செய்து என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப் பற்றி யோசிக்கலாம்என்று சொன்னேன்.

[1993 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களை அப்கிரேடு செய்வது எந்த அடிப்படையில்? என்னுடைய தொகுதியில் கூட புஞ்சைபுளியம்பட்டி என்பது முனிசிபாலிட்டி ஆகின்ற நிலைமையில் உள்ள இடம். ஆகவே அதே போல் நம்பியூர் போன்ற இடங்களில் எல்லாம் அப்கிரேடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் எழுதி கொடுத்தோம். இதுவரையில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் தெரியவில்லை. ஆகவே அப்கிரேடு செய்வது எந்த அடிப்படையில் எதை வைத்து செய்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்றும் நாங்கள் கேட்டு இருக்கின்ற என்னுடைய தொகுதியில் அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்கிரேடு செய்வது அந்தந்தப் பகுதியில் இருக்கின்ற ஜனத்தொகை, எவ்வளவு நோயாளிகள் வருகிறார்கள், அருகில் என்ன என்ன மருத்துவ மனைகள் இருக்கின்றன, இதையெல்லாம் கணக்கில் வைத்து நாம் செய்கிறோம். மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஏற்கனவே என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்றத்தின் மூலமாக அவருக்குப் பதில் வேண்டுமென்று சொன்னால் அவர் தனியாக கேள்வி எழுப்பினால் அதற்கான நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 386, திரு. எஸ். ஜெயக்குமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

386—

சென்னை அசோக்நகர் அரசு எலும்பு சிகிச்சை நிலையத்தை விரிவுபடுத்தல்.

*9992— திரு. எஸ். ஜெயக்குமார் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தியாகராயநகர் தொகுதி, அசோக் நகரில் உள்ள அரசு எலும்பு சிகிச்சை நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?